| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>கடலூர் - 607 001. | மாவட்ட முதல்நிலை அலுவலர்கள்,<br>விவசாய சங்கப் பிரதிநிதிகள் /<br>வேளாண்மை உற்பத்திக்குழு<br>கூட்ட உறுப்பினர்கள்,<br>கடலூர் மாவட்டம். |

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

எண். எஸ்.1/ப.வெ.433/2017 நாள்: 12-10-2017

அய்யா,

பொருள்: கூட்டம் - விவசாயிகள் குறைக் கேட்பு தினக்கூட்டம் மற்றும் வேளாண்மை உற்பத்திக் குழுக் கூட்டம் **அக்டோபர் 2017** மாதத்திற்குரியது **20.10.2017** அன்று நடைபெற இருப்பது – குறித்து.

பார்வை: அரசாணை எண். எம்.எஸ்.121, வேளாண்மை(சி.உ.தா.உ.தி.)துறை, நாள் 22.02.1993.

-------

பார்வையில் கண்டுள்ள அரசாணைக்கிணங்க, **அக்டோபர் 2017** மாதத்திற்குரிய விவசாயிகள் குறைக்கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் **20.10.2017** வெள்ளிக் கிழமையன்று **காலை 10.30** மணிக்கு, **புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் தரைத்தளத்தில் உள்ள பொதுமக்கள் குறைதீர்வு அரங்கம் எண்.115-ல்** நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதல் தளத்தில் உள்ள மினி கூட்ட அரங்கில்** வேளாண்மை பயிர் காப்பீட்டு திட்டத்தின் மாவட்ட கண்காணிப்பு குழு கூட்டம் **20.10.2017** வெள்ளிக்கிழமையன்று **காலை 9.30** மணியளவிலும், வேளாண்மை உற்பத்திக்குழுக் கூட்டம் **காலை 9.45** மணியளவிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கூட்டங்களில் அரசு, அரசு சார்ந்த மாவட்ட முதல்நிலை அலுவலர்கள் வேளாண்மை உற்பத்திக்குழுக் கூட்ட உறுப்பினர்கள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் அவரவருக்குரிய கூட்டத்தில், கூட்டத்திற்குரிய குறிப்பிட்ட நேரத்தில் கலந்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேளாண்மை உற்பத்திக்குழுக் கூட்டத்தினை பொறுத்தவரை, **2017-2018** ஆம் ஆண்டில் **செப்டம்பர் 2017** வரை செயல்படுத்திய மற்றும் செயல்படுத்தப்படவுள்ள செயல் திட்டங்கள் அடங்கிய தொகுப்பினை 10 நகல்களில் **17.10.2017 -க்குள்** தனிநபர் மூலம் தவறாமல் “வேளாண்மைப் பிரிவிற்கு” அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- பிரசாந்த் மு.வடநேரே
மாவட்ட ஆட்சியர்,
கடலூர்.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக.

நகல்:
1) மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் - தகவலுக்காக.
2) மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் - தகவலுக்காக.